**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர்மாவட்டம், கடலூர்.**

**முன்னிலை : திரு. S. ஜவகர், B.L.,**

**முதன்மை மாவட்ட நீதிபதி, கடலூர்.**

**2023-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 5-ஆம் நாள் செவ்வாய் கிழமை**

**அசல் வழக்கு எண். 154/2022-ல்**

**வழக்கிடை மனு எண்.561/2022**

அமுதா .. மனுதாரர்/ 1-ஆம் பிரதிவாதி

/எதிராக/

1. ஜானகி அம்மாள் (**இறந்துவிட்டார்**)
2. எஸ்.ஆர்.சந்திரன்

2-ஆம் வாதிக்காக அவருடைய அதிகார

முகவர் வாசவி ராதாகிருஷ்ணன்

3. கலாவதி ராமச்சந்திரன்
4. வாசவி ராதாகிருஷ்ணன்
5. உமா சங்கர்

5-வது வாதிக்காக அவருடைய அதிகார

முகவர் கலாவதி ராமச்சந்திரன்

6. பானு ராமசாமி

( 1-வது எதிர்மனுதாரர் இறந்துவிட்டபடியால், வ.ம.எண்.640/2023-ல் 07.07.2023 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் மனு திருத்தம் செய்யப்பட்டது) .. எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவானது என் முன்பு 05.12.2023 இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.சச்சிதானந்தம் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பி.பாஸ்கர் அவர்களும் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இம்மனுவில் முன்னிடப்பட்ட சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற

பரிசீலனையிலிருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கும்

**உத்தரவு**

தாவா பிராதில் வழக்குமூலம் இல்லை என்பதாலும், எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் தாவா சொத்திற்கு முற்றிலும் வேறுபட்ட ஆவணங்கள் என்பதாலும், எந்த அடிப்படையும் இல்லாமல் சட்டத்திற்கு புறம்பாக பரிகாரம் கோரியுள்ளதாலும், அரசை ஏமாற்றும் வகையில் சரியான நீதிமன்றக் கட்டணம் செலுத்தாதாலும், சட்டத்திற்கு புறம்பான தாவா வழக்கு என்பதாலும், தாவா பிராதினை நிராகரித்து உத்தரவிடக்கோரி, உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை-7 விதி-11 உடன் இணைந்த பிரிவு 151-ன் கீழ் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**மனுதாரர் தரப்பு திருத்தப்பட்ட மனுவின் சுருக்கம் பின்வருமாறு** :

2. இம்மனுதாரர், மேற்படி அசல் வழக்கில் 1-ஆம் பிரதிவாதி ஆவார். இம்மனுவில் கண்டுள்ள எதிர்மனுதாரர்கள், தாவா சொத்தின் மீதான உரிமையை விளம்புகை செய்யக்கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும், மற்றொரு பரிகாரமான இந்நீதிமன்ற அசல் வழக்கு எண்.271/2021-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை இல்லா நிலையது என்று விளம்புகை செய்யக்கோரியும் மேற்படி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். சட்ட விதிமுறைகளின்படி வாதிகள் அவர்களுடைய சொத்துக்கள் சம்மந்தமாகத் தான் தாவா வழக்கினை தாக்கல் செய்ய வேண்டுமேயொழிய மற்றவர்கள் சொத்துக்கள் மீது வழக்கு தாக்கல் செய்யக்கூடாது. எந்நிலையிலும், இந்த அடாவடித்தனமாக அசல் வழக்கினை தாக்கல் செய்யும்போது, இந்நீதிமன்றமானது, தம்மிச்சையாகவே தாவா வழக்கை சரிபார்த்து தாவா பிராதினை திருப்பியிருக்க வேண்டும். அதற்கு மாறாக, மற்றவர்கள் சொத்துக்கள் மீது தாக்கல் செய்யப்பட்ட தாவா வழக்கினை கோப்பிற்கு எடுக்கப்பட்டதால், வேறு வழியில்லாமல் இந்த மனுதாரருக்கு பிராதினை

நிராகரிக்கும் மனுவினை தாக்கல் செய்ய நேரிட்டுள்ளது. தாவா பிராதில், தாவா சொத்தின் S.No. என்று குறிப்பிடப்பட்டுள்ள 1-வது அயிட்ட சொத்து பண்ருட்டி தாலுக்கா, புதுப்பேட்டை, கோட்லாம்பாக்கம், சுரோத்திரியம் கிராமத்தில் அமைந்துள்ளது. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் மேற்படி சொத்தானது வாதிகளுக்குப் பாத்தியமானது என்பதை காண்பிக்கக்கூடிய ஒரு ஆவணம் கூட தாக்கல் செய்யப்படவில்லை. அந்த ஒரு காரணத்திற்காகவே தாவா பிராதினை கோப்பிற்கு எடுக்காமல் திருப்பப்பட்டிருக்க வேண்டும். தவறாக கோப்பிற்கு எடுக்கப்பட்டிருந்தாலும், எதிர்மனுதாரர்கள் மேற்படி சொத்தானது, வாதிகளுக்குப் பாத்தியமானது என்று காண்பிக்கக்கூடிய ஆவணத்தை தாக்கல் செய்யாததால், எதிர்மனுதாரர்களின் தாவா பிராதினை நிராகரிக்க வேண்டும். தாவா வழக்கானது ஏக்கர் 7.20 செண்ட்டுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதற்கு மாறாக, வாதிகள் தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் 0.69 செண்ட் மட்டுமே உள்ளது. அதன் அடிப்படையில் தாவா பிராதினை நிராகரிக்கப்பட வேண்டும். பிராதின்படி 2-வது பரிகாரமாக இந்நீதிமன்ற அசல் வழக்கு எண்.271/2021 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை இல்லாநிலையது என்று விளம்புகை செய்யக்கோரி பரிகாரம் கோரப்பட்டுள்ளது. தாவா பிராது 4-ன்படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மேற்சொன்ன அசல் வழக்கு எண்.271/2021-ல் 26.04.2022 அன்று லோக் அதாலத்தில் தீர்வம் பிறப்பிக்கப்பட்டது. தீர்க்கப்பட்ட சட்ட விதிகளின்படி, லோக் அதாலத் தீர்ப்பாணையானது உயர்நீதிமன்றத்தில் மட்டுமே விவாதிக்கப்பட வேண்டும், வேறு எந்த நீதிமன்றத்திலும் அல்ல. பரிகாரம் கோரப்படுவது சட்ட விதிகளுக்கு எதிரானது என்பதன் அடிப்படையில் மனு நிராகரிக்கப்பட வேண்டும். அசல் வழக்கு எண்.271/2021 இல் வழக்குச் சொத்தின் மதிப்பு ரூ.25,00,000/- ஆகும். எனவே இது சட்டவிரோதமான கோரிக்கையாக இருந்தாலும் கூட, இந்த வழக்கின் பரிகாரத்திற்காக ரூ.25,00,000/-க்கு மதிப்பிட்டிருக்க வேண்டும். மேலும் முறையான நீதிமன்றக்

கட்டணத்தைச் செலுத்தியிருக்க வேண்டும். அதற்கு மாறாக, எதிர்மனுதாரர்கள் ரூ.25,00,000/-த்திற்கு பதிலாக ரூ.5000/- மும், ரூ.75,000/-த்திற்கு பதிலாக மிகவும் சொற்ப தொகையான ரூ.150/- மட்டுமே செலுத்தி அரசாங்கத்தை ஏமாற்றியுள்ளனர். அதன் அடிப்படையிலேயே தாவா பிராதானது நிராகரிக்கப்படவேண்டும். எதிர்மனுதாரர்கள், நீதிமன்றக் கட்டணம் சட்டப்பிரிவு 25(பி)-ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை மதிப்பிடுவதற்கு வழக்கு சொத்தில் தங்கள் சுவாதீனத்தை நிரூபிக்க வேண்டும். அதற்கு மாறாக, தாவா பிராதில் சொத்தின் மதிப்பு ரூ.2,75,00,000/- குறிப்பிடப்பட்டுள்ளது, அதற்கு எதிர்மனுதாரர்கள்/வாதிகள் நீதிமன்றக் கட்டணம் சட்டப்பிரிவு 25(எ)-ன் படி ரூ.8,25,000/- செலுத்த வேண்டும். எதிர்மனுதாரர்கள்/வாதிகள் அரசாங்கத்தை ஏமாற்றி அவர்கள் சுவாதீனத்தில் இருப்பதாக கூறப்படும் சொத்திற்கு ஒரு ஆவணத்தைக் கூட தாக்கல் செய்யாமல், தவறான சட்ட விதிகளைக் குறிப்பிட்டு குறைவான நீதிமன்றக் கட்டணத்தைச் செலுத்தியிருப்பதால், அந்தக் காரணத்திற்காகவும் மனுவை நிராகரிக்க வேண்டும். எந்த அடிப்படையும் இல்லாமல், எதிர்மனுதாரர்கள்/வாதிகள், தங்களது உரிமை மற்றும் சுவாதீனத்தை காட்டக்கூடிய ஒரு ஆவணம் கூட தாக்கல் செய்யாமல், 8 மற்றும் 9 பிரதிவாதிகள் பிறப்பித்த தீர்வமானது சரியல்ல என்று, பிராதில் 8 மற்றும் 9 பிரதிவாதிகளை தவறாக தரப்பினர்களாக சேர்த்துள்ளனர். எதிர்மனுதாரர்கள்/வாதிகள், 8-ஆம் பிரதிவாதியால் பிறப்பிக்கப்பட்ட தீர்வத்தை குறித்து, இந்நீதிமன்றத்திற்கு முன்பு கேள்வி கேட்க கூடாது, அதற்கான உரிய நீதிமன்றத்தில் தான் தாவா வழக்கினை தாக்கல் செய்து பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும். எனவே, அந்த அடிப்படையில், தாவா பிராதானது நிராகரிப்பட வேண்டும். சட்டப்படி தாவா வழக்கில் வழக்கு மூலம் எழவில்லை. தாவா சொத்தானது, எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கு முற்றிலும் முரண்பாடானது. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் எந்த அடிப்படையும் இன்றி சட்டத்திற்கு

முரணாக பரிகாரம் கோரியுள்ளனர். சரியான நீதிமன்றக் கட்டணத்தை செலுத்தாமல் அராசங்கத்தை ஏமாற்றி, சட்டத்திற்கு புறம்பான தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளார். எனவே, மேற்சொன்ன சங்கதிகளின் அடிப்படையில் தாவா பிராதினை நிராகரிக்கப்பட வேண்டும். இல்லையேல், மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டமும், கஷ்டமும் ஏற்படும். எனவே, எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா பிராதினை நிரகாரித்து உத்தரவிட வேண்டுமாய் பிரார்த்திக்கிறார். வழக்கு நிலுவையில் இருக்கும்போது, 1-வது எதிர்மனுதாரர், 2 முதல் 6 எதிர்மனுதாரர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டதாகவும், 1-வது எதிர்மனுதாரருக்கு 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் மட்டுமே வாரிசுதாரர்கள் என்றும், அவர்களைத் தவிர வேறு யாரும் இல்லை என்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் கூறியுள்ளார்.

3. **<u>4-வது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 1 முதல் 3 மற்றும் 5 மற்றும் 6 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிர் உரையின் சுருக்கம்</u>** :

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவானது அடாவடித்தனமாகது, சட்டப்படிக்கும் பொருண்மை படிக்கும் செல்லத்தக்கதல்ல, செலவுத் தொகையுடன் தள்ளுபடிசெய்யத்தக்கது. இந்த எதிர்மனுதாரரால் குறிப்பாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை இந்த எதிர்மனுதாரர் மறுக்கிறார். மனுதாரர் அவருடைய மனுவில், தாவா பிராதினை நிராகரிப்பதற்காக கூறியுள்ள காரணங்கள் அனைத்தும் பொய்யானது மற்றும் இந்த எதிர்மனுதாரர் குறிப்பாக மறுக்கிறார். எதிர்மனுதாரர் சமர்ப்பித்துக்கொள்வது யாதெனில், தாவா சொத்துக்களை பொறுத்து, ஒரு தாஜுதீன் என்பவர் பண்ருட்டி, சார்பு நீதிமன்றத்தில் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி அசல் வழக்கு எண்.94/2002 என்ற வழக்கினை தாக்கல் செய்து, பணஅதிகார வரம்பின் காரணமாக, அந்த வழக்கானது பண்ருட்டி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு

மாற்றப்பட்டு, அந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.296/2004-ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது. முழு விசாரணைக்குப் பின் அந்த வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த தீர்ப்பாணையை எதிர்த்து, மேற்சொன்ன தாஜுதீன் பண்ருட்டி, சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண்.33/2010 என்ற மேல்முறையீட்டு வழக்கினை தாக்கல் செய்தார். அந்த மேல்முறையீடும் முழுவிசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. அந்த மேல்முறையீட்டு வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மேற்சொன்ன தாஜுதீன் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் 2-வது மேல்முறையீட்டு வழக்கு எண். 541/2011 மற்றும் 542/2011 தாக்கல் செய்தார். அந்த இரண்டு மேல்முறையீடும் நீதிமன்றத்திற்கு வெளியே பைசல் ஆகிவிட்டபடியால் 04.01.2022 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டன. இந்த எதிர்மனுதாரர்கள் மற்றும் ஒரு ரவி ஆகியோர் தாவா சொத்தின் முழு உரிமையாளராக இருந்து, வழக்கை நடத்தியதில், மேற்படி தாவா வழக்கானது தள்ளுபடியாகிவிட்டது. முதல் மேல்முறையீட்டு நீதிமன்றமும், உயர்நீதிமன்றமும் விசாரணை நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ஊர்ஜிதம் செய்தது. 2-வது மேல்முறையீடு வழக்கானது 04.01.2022 அன்று முடிக்கப்பட்டது. எதிர்மனுதாரர்கள் தான் தாவா சொத்துக்களின் முழு உரிமையாளர்கள் மேற்படி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்துக்கள் எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியமானதாகும். எதிர்மனுதாரர்கள் தாவா சொத்துக்களின் முழு உரிமையாளர்களாக இருக்கும்போது, 8-வது பிரதிவாதி, தாவா சொத்துக்களின் ஒரு பகுதியை எதிர்மனுதாரர்களிடமிருந்து நில ஆர்ஜிதம் செய்து, அதற்கான நஷ்ட ஈடு தொகையினை எதிர்மனுதாரர்களுக்கு கொடுப்பதற்காக மார்ச்-2022-ல் எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு கொடுத்தார். 8-வது பிரதிவாதி, இந்த எதிர்மனுதாரர்களிடம், நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட சொத்துக்கான உரிமை மூல அனைத்து ஆவணங்களையும்

தாக்கல் செய்ய உத்தரவிட்டார். தாவா சொத்துக்கள், இந்த எதிர்மனுதாரர்களுக்குப் பாத்தியமான சொத்துக்கள் என்பதை நிரூபிக்கும் வகையில், வழக்கு பிராதுடன் இந்த எதிர்மனுதாரர்கள், பண்ருட்டி, மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.296/2004-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் புகைப்பட நகலினையும், பண்ருட்டி, சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு எண்.33/2010-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் புகைப்பட நகல் ஆகியவற்றை தாக்கல் செய்தனர். மேற்சொன்ன இரண்டு தீர்ப்பாணைகளிலும், தாவா சொத்தின் சர்வே எண் மற்றும நான்கெல்லைகள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, பிரமாண வாக்குமூலத்தில் 4-வது பாராவில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை இந்த எதிர்மனுதாரர் குறிப்பாக மறுக்கிறார். தாவா சர்வே எண்ணில் கண்ட சொத்தானது, இந்த எதிர்மனுதாரரின் தகப்பனார் ஸ்ரீகுமார் ஐயர் மற்றும் அவருடைய தாத்தா துரைசாமி கனபாடிகள் ஆகியோருக்குச் சொந்தமானது. அது அவர்களுடைய மூதாதையர் சொத்தாகும். மேலும், தாவா சர்வே எண்ணில் கண்டுள்ள சொத்தினை அவர்கள் கிரையம் பெற்றனர். இறந்துபோன ஸ்ரீகுமார் ஐயரின் சட்டப்பூர்வமான வாரிசுதாரர்கள் என்ற முறையில், இந்த எதிர்மனுதாரர்கள் தான் தாவா சொத்தின் முழு உரிமையாளர்கள் ஆவர். விசாரணை நீதிமன்றமும், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றமும், மற்றும் மெட்ராஸ் உயர்நீதிமன்றமும் எதிர்மனுதாரர்கள் தான் தாவா சொத்துக்களின் முழு உரிமையாளர்கள் என்பதை ஏற்றுக்கொண்டு, அவ்வாறே விளம்புகை செய்து தீர்ப்பாணை பிறப்பித்துள்ளன. தாவா சொத்தானது ஒற்றை துண்டாக உள்ளது அதன் விஸ்தீர்ணம் ஏக்கர் 7.20 செண்ட் ஆகும். இந்த எதிர்மனுதாரர் குறிப்பாக சொல்வது யாதெனில், தாவா சொத்துக்களின் முழு விஸ்தீர்ணத்திற்கும் சேர்த்து தான் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அதனை விசாரணையின்போது நிரூபிக்கப்படும். தாவா சொத்துக்களின் மீதான உரிமையை

உ.வி.மு.ச. பிரிவு 7 விதி 11-ன் படியான மனுவிலே தீர்மானிக்க முடியாது. 2-வது பரிகாரம் குறித்து, மனுதாரரால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.271/2021 என்ற வழக்கில் இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பினர்கள் அல்லர். எனவே, 2-வது பரிகாரத்தை குறித்து, தாவா வழக்கானது நிலைக்கத்தக்கது, மற்றும் லோக் அதாலத்தில் பிறப்பிக்கப்பட்ட தீர்வத்தை தீர்மானிக்கக்கூடிய அதிகாரம் இந்நீதிமன்றத்திற்கு உள்ளது. 2-வது பரிகாரத்தை பொறுத்து, மனுதாரரால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.271/2021-ல் இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பினர்கள் அல்லர் மேலும், புதுப்பேட்டை, சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.961/2022 ஆவணத்திலும் இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பினர்கள் அல்லர். எனவே, இந்த எதிர்மனுதாரர்கள் தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் சட்டப்பிரிவு 25(டி)-ன்படி நீதிமன்றக் கட்டணம் செலுத்தியுள்ளனர். இந்த எதிர்மனுதாரர்கள் தான் தாவா சொத்துக்களில் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இருந்து வருகின்றனர். 27.04.2022 அன்று இந்த மனுதாரரும், 2 முதல் 6 பிரதிவாதிகளும் தாவா சொத்துக்களில் உள்ள இந்த எதிர்மனுதாரர்களின் உரிமையை மறுத்து, எதிர்மனுதாரர்களின் சுவாதீனத்தை இடையூறு செயண்ய முயற்சி செய்ததால், எதிர்மனுதாரர்கள் விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா வழக்கு தாக்கல் செய்து, அதற்கு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் சட்டப்பிரிவு 25(பி)-ன் படி நீதிமன்றக் கட்டணம் செலுத்தியுள்ளனர். மேற்படி அசல் வாக்கில் எழுப்பப்படும் எழுவினாவிற்கு தீர்வு காண 8,9 பிரதிவாதிகள் அசல் வழக்கிற்கு தேவையான தரப்பினர்கள் ஆவர். எனவே, முறையான தீர்ப்பு நடவடிக்கைக்காக, மேற்படி பிரதிவாதிகளை மேற்படி அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த எதிர்மனுதாரருக்கு இதுகுறித்து கேள்வி கேட்க இடமில்லை. வழக்குமூலம் என்பது, ஒவ்வொரு உண்மை சங்கதிகளை பொறுத்தும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் அவர்களின் உரிமைக்கு ஆதரவாக, நீதிமன்றத் தீர்ப்பிற்கு

நிரூபிக்க வேண்டியது அவசியம். மற்ற வகையில், வழக்கு மூலம் என்பது சங்கதிகளின் ஒரு தொகுப்பாக இருப்பதால், அதனை எதிர்மனுதாரர்கள் விசாரணையின்போது தான் நிரூபிக்க முடியும். நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் ஒரு சிறிய மாறுபட்ட வழக்கு மூலம் கூடினாலும், அதை பொறுத்து விசாரணை செய்யவும் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இருக்கும். மேற்படி அசல் வழக்கின் சொத்துக்கள் இந்நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் அமைந்துள்ளது. இந்தச் சொத்துக்களை பொறுத்து, இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.271/2021-ல் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. எனவே, இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.271/2021-ல் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதால், மேற்படி அசல் வழக்கின் வழக்குமூலம் இந்நீதிமன்ற அதிகார வரம்பிற்கு உட்டுபட்டு எழுந்துள்ளது. பிராதில் உள்ள சங்கதிகளை, அதன் தொடர்புடைய உண்மைகளை கவனத்திற்கு கொண்டு வந்து தீர்மானிக்க உ.வி.முச. கட்டளை 7 விதி 11-ன் படி மனு தேவையானதாக இருக்கிறது என்று தெளிவுப்படுத்துகிறது. உ.விமுச. விதி 11 கட்டளை 7-ன் படியான மனுவினை தீர்மானிப்பதற்காக, பிரதிவாதி, பிராதின் உண்மை சங்கதிகளுக்கு பொறுத்தமற்ற குற்றச்சாட்டினை எடுத்துள்ளார். பிராதும், அதனுடன் தாக்கல் செய்யப்பட்டு ஆவணங்களும் உண்மையான வழக்கு மூலத்தை விளக்குகிறது. எனவே, பிராதானது நிலைக்கத்தக்க ஒன்றாகும். 26.04.2022 அன்று மனுதாரர்/1-ஆம் பிரதிவாதி பெற்ற லோக் அதாலத் தீர்வத்தை புதுப்பேட்டை, சார்பதிவாளரிடம் பதிவுக்காக தாக்கல் செய்து, அன்றே புதுப்பேட்டை சார்பதிவாளரால் பதிவு செய்யப்பட்டுள்ளதை எதிர்மனுதாரர்கள் பிராதில் வழக்குமூலமாக துல்லியமாக குறிப்பிட்டுள்ளார். எனவே, பிராதானது நிலைக்கத்தக்க ஒன்றாகும். எனவே, மனுதாரரின் மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமாய் பிரார்த்திக்கிறார்.

4. மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியமோ, ஆவண சாட்சியமோ முன்னிடப்படவில்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பில், எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.13 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன. வாய்மொழி சாட்சியம் முன்னிடப்படவில்லை.

5. **இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனையாதெனில்** :

மனுதாரர் மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பது தீர்வு காண வேண்டிய பிரச்சனையாகும்.

**பிரச்சனை:**

6. தாவா பிராதில் வழக்குமூலம் இல்லை என்பதாலும், எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் தாவா சொத்திற்கு முற்றிலும் வேறுபட்ட ஆவணங்கள் என்பதாலும், எந்த அடிப்படையும் இல்லாமல் சட்டத்திற்கு புறம்பாக பரிகாரம் கோரியுள்ளதாலும், அரசை ஏமாற்றும் வகையில் சரியான நீதிமன்றக் கட்டணம் செலுத்தாதாலும், சட்டத்திற்கு புறம்பான தாவா வழக்கு என்பதாலும், தாவா பிராதினை நிராகரித்து உத்தரவிடக்கோரி, உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை-7 விதி-11 உடன் இணைந்த பிரிவு 151-ன் கீழ் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

7. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், எதிர்மனுதாரர்கள், தாவா சொத்தின் மீதான உரிமையை விளம்புகை செய்யக்கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும், மற்றொரு பரிகாரமான இந்நீதிமன்ற அசல் வழக்கு எண்.271/2021-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை இல்லா நிலையது என்று விளம்புகை செய்யக்கோரியும் மேற்படி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளனர் என்றும், சட்ட விதிமுறைகளின்படி வாதிகள் அவர்களுடைய சொத்துக்கள் சம்மந்தமாகத் தான் தாவா வழக்கினை தாக்கல் செய்ய வேண்டுமேயொழிய மற்றவர்கள் சொத்துக்கள் மீது வழக்கு தாக்கல் செய்யக்கூடாது என்றும், தாவா பிராதில், தாவா சொத்தின் S.No. என்று

குறிப்பிடப்பட்டுள்ள 1-வது அயிட்ட சொத்து பண்ருட்டி தாலுக்கா, புதுப்பேட்டை, கோட்லாம்பாக்கம், சுரோத்திரியம் கிராமத்தில் அமைந்துள்ளது என்றும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் மேற்படி சொத்தானது வாதிகளுக்குப் பாத்தியமானது என்பதை காண்பிக்கக்கூடிய ஒரு ஆவணம் கூட தாக்கல் செய்யப்படவில்லை என்றும், எதிர்மனுதாரர்கள் மேற்படி சொத்தானது, வாதிகளுக்குப் பாத்தியமானது என்று காண்பிக்கக்கூடிய ஆவணத்தை தாக்கல் செய்யாததால், எதிர்மனுதாரர்களின் தாவா பிராதினை நிராகரிக்க வேண்டும் என்றும், தாவா வழக்கானது ஏக்கர் 7.20 செண்ட்டுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதற்கு மாறாக, வாதிகள் தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் 0.69 செண்ட் மட்டுமே உள்ளது என்றும், அதன் அடிப்படையில் தாவா பிராதினை நிராகரிக்கப்பட வேண்டும் என்றும், பிராதின்படி 2-வது பரிகாரமாக இந்நீதிமன்ற அசல் வழக்கு எண்.271/2021ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை இல்லாநிலையது என்று விளம்புகை செய்யக்கோரி பரிகாரம் கோரப்பட்டுள்ளது. என்றும், மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மேற்சொன்ன அசல் வழக்கு எண்.271/2021-ல் 26.04.2022 அன்று லோக் அதாலத்தில் தீர்வம் பிறப்பிக்கப்பட்டது என்றும், தீர்க்கப்பட்ட சட்ட விதிகளின்படி, லோக் அதாலத் தீர்ப்பாணையானது உயர்நீதிமன்றத்தில் மட்டுமே விவாதிக்கப்பட வேண்டும் என்றும், வேறு எந்த நீதிமன்றத்திலும் தாக்கல் செய்ய இயலாது என்றும், அவ்வாறு தாக்கல் செய்து பரிகாரம் கோருவது சட்ட விதிகளுக்கு எதிரானது என்றும், அதன் அடிப்படையில் மனு நிராகரிக்கப்பட வேண்டும் என்றும், அசல் வழக்கு எண்.271/2021 இல் வழக்குச் சொத்தின் மதிப்பு ரூ.25,00,000/- ஆகும் என்றும், இந்த வழக்கின் பரிகாரத்திற்காக ரூ.25,00,000/-க்கு மதிப்பிட்டு, முறையான நீதிமன்றக் கட்டணத்தைச் செலுத்தியிருக்க வேண்டும் என்றும், அதற்கு மாறாக, எதிர்மனுதாரர்கள் ரூ.25,00,000/-த்திற்கு பதிலாக ரூ.5000/- மும், ரூ.75,000/-த்திற்கு பதிலாக மிகவும் சொற்ப

தொகையான ரூ.150/- மட்டுமே செலுத்தி அரசாங்கத்தை ஏமாற்றியுள்ளனர் என்றும், அதன் அடிப்படையிலேயே தாவா பிராதானது நிராகரிக்கப்படவேண்டும் என்றும், எதிர்மனுதாரர்கள், நீதிமன்றக் கட்டணம் சட்டப்பிரிவு 25(பி)-ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை மதிப்பிடுவதற்கு வழக்கு சொத்தில் தங்கள் சுவாதீனத்தை நிரூபிக்க வேண்டும் என்றும், அதற்கு மாறாக, தாவா பிராதில் சொத்தின் மதிப்பு ரூ.2,75,00,000/- குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதற்கு எதிர்மனுதாரர்கள்/வாதிகள் நீதிமன்றக் கட்டணம் சட்டப்பிரிவு 25(எ)-ன் படி ரூ.8,25,000/- செலுத்த வேண்டும் என்றும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் அரசாங்கத்தை ஏமாற்றி அவர்கள் சுவாதீனத்தில் இருப்பதாக கூறப்படும் சொத்திற்கு ஒரு ஆவணத்தைக் கூட தாக்கல் செய்யாமல், தவறான சட்ட விதிகளைக் குறிப்பிட்டு குறைவான நீதிமன்றக் கட்டணத்தைச் செலுத்தியிருப்பதால் அந்த அடிப்படையின் காரணமாக பிராதினை நிராகரிக்கப்பட வேண்டும் என்றும், எந்த அடிப்படையும் இல்லாமல், எதிர்மனுதாரர்கள்/வாதிகள், தங்களது உரிமை மற்றும் சுவாதீனத்தை காட்டக்கூடிய ஒரு ஆவணம் கூட தாக்கல் செய்யாமல், 8 மற்றும் 9 பிரதிவாதிகள் பிறப்பித்த தீர்வமானது சரியல்ல என்று, பிராதில் 8 மற்றும் 9 பிரதிவாதிகளை தவறாக தரப்பினர்களாக சேர்த்துள்ளனர் என்றும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள், 8-ஆம் பிரதிவாதியால் பிறப்பிக்கப்பட்ட தீர்வத்தை குறித்து, இந்நீதிமன்றத்திற்கு முன்பு கேள்வி கேட்க கூடாது, அதற்கான உரிய நீதிமன்றத்தில் தான் தாவா வழக்கினை தாக்கல் செய்து பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும் என்றும், எனவே, சட்டப்படி தாவா வழக்கில் வழக்கு மூலம் எழாததாலும், தாவா சொத்தானது எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களுக்கு முற்றிலும் முரண்பாடானது என்பதாலும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் எந்த அடிப்படையும் இன்றி சட்டத்திற்கு முரணாக பரிகாரம் கோரியுள்ளதாலும், சரியான நீதிமன்றக் கட்டணத்தை செலுத்தாமல் அராசங்கத்தை ஏமாற்றி, சட்டத்திற்கு புறம்பான தாவா வழக்கினை தாக்கல்

செய்துள்ளதாலும், தாவா பிராதினை நிராகரிக்கப்பட வேண்டும் என்றும், இல்லையேல், மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டமும், கஷ்டமும் ஏற்படும் என்றும் வாதிடப்பட்டு, தனது வாதுரைக்கு ஆதரவாக கீழ்கண்ட மாண்புமிகு உச்சநீதிமன்றம் மற்றும் மெட்ராஸ் உயர்நீதிமன்ற முன் தீர்ப்புகளை சுட்டிக்காட்டிள்ளார்.

1. (2018) 13 Supreme Court Cases 480

2. 2010-5-L.W.124 Supreme Court of India

3. 2013-2-L.W.84 High Court of Madras S.A.No.711 of 2009 and M.P.No.1/2009 dated: 08.01.2013.

4. 1997-2-L.W.780 Madras High Court

5. 2014-3-L.W.419 High Court of Madras

6. 2015-3-L.W.287 High Court of Madras

8. எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், தாவா சொத்துக்களை பொறுத்து, ஒரு தாஜுதீன் என்பவர் பண்ருட்டி, சார்பு நீதிமன்றத்தில் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி அசல் வழக்கு எண்.94/2002 என்ற வழக்கினை தாக்கல் செய்து, பணஅதிகார வரம்பின் காரணமாக, அந்த வழக்கானது பண்ருட்டி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, அந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.296/2004-ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, முழு விசாரணைக்குப் பின் அந்த வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், அந்த தீர்ப்பாணையை எதிர்த்து, மேற்சொன்ன தாஜுதீன் பண்ருட்டி, சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண்.33/2010 என்ற மேல்முறையீட்டு வழக்கினை தாக்கல் செய்தார் என்றும், அந்த மேல்முறையீடும் முழுவிசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும், அந்த மேல்முறையீட்டு வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து

மேற்சொன்ன தாஜுதீன் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் 2-வது மேல்முறையீட்டு வழக்கு எண். 541/2011 மற்றும் 542/2011 தாக்கல் செய்தார் என்றும், அந்த இரண்டு மேல்முறையீடும் நீதிமன்றத்திற்கு வெளியே பைசல் ஆகிவிட்டபடியால் 04.01.2022 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டன என்றும், இந்த எதிர்மனுதாரர்கள் மற்றும் ஒரு ரவி ஆகியோர் தாவா சொத்தின் முழு உரிமையாளராக இருந்து, வழக்கை நடத்தியதில், மேற்படி தாவா வழக்கானது தள்ளுபடியாகிவிட்டது என்றும், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றமும், உயர்நீதிமன்றமும் விசாரணை நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ஊர்ஜிதம் செய்தது என்றும், 2-வது மேல்முறையீடு வழக்கானது 04.01.2022 அன்று முடிக்கப்பட்டது என்றும், எதிர்மனுதாரர்கள் தான் தாவா சொத்துக்களின் முழு உரிமையாளர்கள் மேற்படி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளனர் என்றும், தாவா சொத்துக்கள் எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியமானது என்றும், எதிர்மனுதாரர்கள் தாவா சொத்துக்களின் முழு உரிமையாளர்களாக இருக்கம்போது, 8-வது பிரதிவாதி, தாவா சொத்துக்களின் ஒரு பகுதியை எதிர்மனுதாரர்களிடமிருந்து நில ஆர்ஜிதம் செய்து, அதற்கான நஷ்ட ஈடு தொகையினை எதிர்மனுதாரர்களுக்கு கொடுப்பதற்காக மார்ச்-2022-ல் எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு கொடுத்தார் என்றும், 8-வது பிரதிவாதி, இந்த எதிர்மனுதாரர்களிடம், நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட சொத்துக்கான உரிமை மூல அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்ய உத்தரவிட்டார் என்றும், தாவா சொத்துக்கள், இந்த எதிர்மனுதாரர்களுக்குப் பாத்தியமான சொத்துக்கள் என்பதை நிரூபிக்கும் வகையில், வழக்கு பிராதுடன் இந்த எதிர்மனுதாரர்கள், பண்ருட்டி, மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.296/2004-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் புகைப்பட நகலினையும், பண்ருட்டி, சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு எண்.33/2010-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் புகைப்பட நகல்

ஆகியவற்றை தாக்கல் செய்தனர் என்றும், மேற்சொன்ன இரண்டு தீர்ப்பாணைகளிலும், தாவா சொத்தின் சர்வே எண் மற்றும நான்கெல்லைகள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன என்றும், தாவா சர்வே எண்ணில் கண்ட சொத்தானது, இந்த எதிர்மனுதாரரின் தகப்பனார் ஸ்ரீகுமார் ஐயர் மற்றும் அவருடைய தாத்தா துரைசாமி கனபாடிகள் ஆகியோருக்குச் சொந்தமானது என்றும், அது அவர்களுடைய மூதாதையர் சொத்து என்றும், மேலும், தாவா சர்வே எண்ணில் கண்டுள்ள சொத்தினை அவர்கள் கிரையம் பெற்றனர் என்றும், இறந்துபோன ஸ்ரீகுமார் ஐயரின் சட்டப்பூர்வமான வாரிசுதாரர்கள் என்ற முறையில், இந்த எதிர்மனுதாரர்கள் தான் தாவா சொத்தின் முழு உரிமையாளர்கள் என்றும், விசாரணை நீதிமன்றமும், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றமும், மற்றும் மெட்ராஸ் உயர்நீதிமன்றமும் எதிர்மனுதாரர்கள் தான் தாவா சொத்துக்களின் முழு உரிமையாளர்கள் என்பதை ஏற்றுக்கொண்டு, அவ்வாறே விளம்புகை செய்து தீர்ப்பாணை பிறப்பித்துள்ளன என்றும், தாவா சொத்தானது ஒற்றை துண்டாக உள்ளது அதன் விஸ்தீர்ணம் ஏக்கர் 7.20 செண்ட் என்றும், தாவா சொத்துக்களின் முழு விஸ்தீர்ணத்திற்கும் சேர்த்து தான் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றும், அதனை விசாரணையின்போது நிரூபிக்கப்படும் என்றும், தாவா சொத்துக்களின் மீதான உரிமையை உ.வி.மு.ச. பிரிவு 7 விதி 11-ன் படியான மனுவிலே தீர்மானிக்க முடியாது என்றும், 2-வது பரிகாரம் குறித்து, மனுதாரரால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.271/2021 என்ற வழக்கில் இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பினர்கள் அல்லர் என்றும், எனவே, 2-வது பரிகாரத்தை குறித்து, தாவா வழக்கானது நிலைக்கத்தக்கது, மற்றும் லோக் அதாலத்தில் பிறப்பிக்கப்பட்ட தீர்வத்தை தீர்மானிக்கக்கூடிய அதிகாரம் இந்நீதிமன்றத்திற்கு உள்ளது என்றும், 2-வது பரிகாரத்தை பொறுத்து, மனுதாரரால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.271/2021-ல் இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பினர்கள் அல்லர் மேலும், புதுப்பேட்டை,

சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.961/2022 ஆவணத்திலும் இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பினர்கள் அல்லர் என்றும், எனவே, இந்த எதிர்மனுதாரர்கள் தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் சட்டப்பிரிவு 25(டி)-ன்படி நீதிமன்றக் கட்டணம் செலுத்தியுள்ளனர் என்றும், இந்த எதிர்மனுதாரர்கள் தான் தாவா சொத்துக்களில் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இருந்து வருகின்றனர் என்றும், 27.04.2022 அன்று இந்த மனுதாரரும், 2 முதல் 6 பிரதிவாதிகளும் தாவா சொத்துக்களில் உள்ள இந்த எதிர்மனுதாரர்களின் உரிமையை மறுத்து, எதிர்மனுதாரர்களின் சுவாதீனத்தை இடையூறு செய்ய முயற்சி செய்ததால், எதிர்மனுதாரர்கள் விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா வழக்கு தாக்கல் செய்து, அதற்கு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் சட்டப்பிரிவு 25(பி)-ன் படி நீதிமன்றக் கட்டணம் செலுத்தியுள்ளனர் என்றும், மேற்படி அசல் வழக்கில் எழுப்பப்படும் எழுவினாவிற்கு தீர்வு காண 8,9 பிரதிவாதிகள் அசல் வழக்கிற்கு தேவையான தரப்பினர்கள் ஆவர் என்றும், எனவே, முறையான தீர்ப்பு நடவடிக்கைக்காக, மேற்படி பிரதிவாதிகளை மேற்படி அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், இந்த எதிர்மனுதாரருக்கு இதுகுறித்து கேள்வி கேட்க இடமில்லை என்றும், வழக்குமூலம் என்பது, ஒவ்வொரு உண்மை சங்கதிகளை பொறுத்தும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் அவர்களின் உரிமைக்கு ஆதரவாக, நீதிமன்றத் தீர்ப்பிற்கு நிரூபிக்க வேண்டியது அவசியம் என்றும், மற்ற வகையில், வழக்கு மூலம் என்பது சங்கதிகளின் ஒரு தொகுப்பாக இருப்பதால், அதனை எதிர்மனுதாரர்கள் விசாரணையின்போது தான் நிரூபிக்க முடியும் என்றும், நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் ஒரு சிறிய மாறுபட்ட வழக்கு மூலம் கூடினாலும், அதை பொறுத்து விசாரணை செய்யவும் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறது என்றும், மேற்படி அசல் வழக்கின் சொத்துக்கள் இந்நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் அமைந்துள்ளது என்றும், இந்தச் சொத்துக்களை பொறுத்து, இந்நீதிமன்றத்தில்

அசல் வழக்கு எண்.271/2021-ல் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றும், எனவே, இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.271/2021-ல் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதால், மேற்படி அசல் வழக்கின் வழக்குமூலம் இந்நீதிமன்ற அதிகார வரம்பிற்கு உட்டுபட்டு எழுந்துள்ளது என்றும், பிராதில் உள்ள சங்கதிகளை, அதன் தொடர்புடைய உண்மைகளை கவனத்திற்கு கொண்டு வந்து தீர்மானிக்க உ.வி.முச. கட்டளை 7 விதி 11-ன் படி மனு தேவையானதாக இருக்கிறது என்று தெளிவிப்படுத்துகிறது என்றும், உ.விமுச. விதி 11 கட்டளை 7-ன் படியான மனுவினை தீர்மானிப்பதற்காக, பிரதிவாதி, பிராதின் உண்மை சங்கதிகளுக்கு பொறுத்தமற்ற குற்றச்சாட்டினை எடுத்துள்ளார் என்றும், பிராதும், அதனுடன் தாக்கல் செய்யப்பட்டு ஆவணங்களும் உண்மையான வழக்கு மூலத்தை விளக்குகிறது என்றும், எனவே, பிராதானது நிலைக்கத்தக்க ஒன்று என்றும், 26.04.2022 அன்று மனுதாரர்/1-ஆம் பிரதிவாதி பெற்ற லோக் அதாலத் தீர்வத்தை புதுப்பேட்டை, சார்பதிவாளரிடம் பதிவுக்காக தாக்கல் செய்து, அன்றே புதுப்பேட்டை சார்பதிவாளரால் பதிவு செய்யப்பட்டுள்ளதை எதிர்மனுதாரர்கள் பிராதில் வழக்குமூலமாக துல்லியமாக குறிப்பிட்டுள்ளார் என்றும், எனவே, பிராதினை நிராகரிக்கக்கோரி தாக்கல் செய்துள்ள மனுதாரரின் மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமாய் வாதிட்டு, 26.12.1956 ந்தேதியிட்ட துரைசாமிகனபாடிகன் பெயரில் உள்ள பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் புகைப்பட நகல் எ.சா.ஆ.1-ஆகவும், 06.12.1956 ந்தேதியிட்ட துரைசாமிகனபாடிகன் பெயரில் உள்ள பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் புகைப்பட நகல் எ.சா.ஆ.2-ஆகவும், 26.05.1959 ந்தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் புகைப்பட நகல் எ.சா.ஆ.3-ஆகவும், 25.10.1963 ந்தேதியிட்ட ஸ்ரீகுமார் அய்யர் பெயரில் உள்ள பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் புகைப்பட நகல் எ.சா.ஆ.4-ஆகவும், 14.07.2010 ந்தேதியிட்ட பண்ருட்டி, மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு

எண்.296/04-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட நகலின் புகைப்பட நகல் எ.சா.ஆ.5-ஆகவும், 14.07.2010 ந்தேதியிட்ட பண்ருட்டி, மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.296/04-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் சான்றிட்ட நகலின் புகைப்பட நகல் எ.சா.ஆ.6-ஆகவும், 21.01.2011 ந்தேதியிட்ட பண்ருட்டி, சார்பு நீதிமன்ற உரிமையியல் மேல்முறையீட்டு வழக்கு எண்.33/2010 மற்றும் குறுக்கு மேல்முறையீட்டில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் சான்றிட்ட நகலின் புகைப்பட நகல் எ.சா.ஆ.7-ஆகவும், 04.01.2022 ந்தேதியிட்ட மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்ற S.A.Nos.541 & 542/2011 and M.P.Nos. 1 &1 of 2011-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையின் நகல். எ.சா.ஆ.8-ஆகவும், 28.03.2022 ந்தேதியிட்ட குமாரய்யர் மற்றும் அமரசாமி கவுண்டர் ஆகியோர் பெயரில் உள்ள பட்டாவின் கணினி நகல் எ.சா.ஆ.9-ஆகவும், 08.03.2022 ந்தேதியிட்ட நில ஆர்ஜித நிலங்களுக்கு தீர்ப்பாணை வழங்கப்பட்டது சம்மந்தமாக தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி.எ) அலுவலகம், சென்னை-கன்னியாகுமரி தொழிற்தடதிட்டம், காஞ்சிபுரம் அனுப்பிய வாசவிக்கு அனுப்பிய அழைப்பாணையின் நகல் எ.சா.ஆ.10-ஆகவும், கடலூர், முதன்மை மாவட்ட நீதிமன்ற O.S.No.271/2022-ன் பிராது மற்றும் Lok Adalat settlement Memo ஆகியவற்றை பதிவு செய்யப்பட்டதின் புகைப்பட நகல் எ.சா.ஆ.11-ஆகவும், 27.04.2022 ந்தேதியிட்ட வில்லங்கச் சான்றின் புகைப்பட நகல் எ.சா.ஆ.12-ஆகவும், 27.04.2022 ந்தேதியிட்ட அரசு வழிக்காட்டு மதிப்பீட்டின் பதிவிறக்க நகல் எ.சா.ஆ.13-ஆகவும் குறியீடு செய்து, தனது வாதுரைக்கு ஆதரவாக மாண்புமிகு உச்சநீதிமன்றம் மற்றும் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் முன் தீர்ப்புகளை சுட்டிக்காட்டியுள்ளார்.

1. AIR 2004 SC 1801 Para 15, 16 and 17

2. 2014 CJ (SC) 1113 Page3607 Para No.13

3. 2013 CJ (Mad) 2560 High Court of Madras Para 15,20 and 39

9. இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. இம்மனுவுடன் முன்னிடப்பட்ட எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.13 வரையிலான ஆவணங்கள் மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் தரப்பில் மேற்படி அசல் வழக்கின் பிராதினை நிராகரித்து உத்தரவிடக்கோரி உவிமுச. கட்டளை 7 விதி -11 உடன் இணைந்த பிரிவு 151-ன் கீழ் தாக்கல் இம்மனு தாக்கல் செய்யப்பட்டள்ளது. ஒரு வழக்கின் பிராதினை நிராகரிக்க வேண்டுமென்றால், 1. வழக்கு மூலம் இல்லை என்பதை நிரூபிக்க வேண்டும். 2. நீதிமன்றக் கட்டணம் சரியாக செலுத்துப்பட்டுள்ளதா? என்பதாகும். 3. வழக்கானது காலவரையறைக்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா? என்பதை பரிசீலிக்க வேண்டும். மனுதாரர் தரப்பில், தாவா பிராதில் தாவா சொத்தின் S.No. என்று குறிப்பிடப்பட்டுள்ள 1-வது அயிட்ட சொத்து பண்ருட்டி தாலுக்கா, புதுப்பேட்டை கோட்லாம்பாக்கம், சுரோத்திரியம் கிராமத்தில் அமைந்துள்ளது என்றும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் மேற்படி சொத்தானது வாதிகளுக்குப் பாத்தியமானது என்பதை காண்பிக்கக்கூடிய ஒரு ஆவணம் கூட தாக்கல் செய்யப்பட வில்லை என்றும், தாவா பிராதின்படி 2-வது பரிகாரமாக இந்நீதிமன்ற அசல் வழக்கு எண்.271/2021-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை இல்லாநிலையது என்று விளம்புகை செய்யக்கோரி பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றும், தாவா பிராது 4 ன்படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மேற்சொன்ன அசல் வழக்கு எண்.271/2021-ல் 26.04.2022 அன்று லோக் அதாலத்தில் தீர்வம் பிறப்பிக்கப்பட்டது என்றும், தீர்க்கப்பட்ட சட்ட விதிமுறைகளின்படி லோக் அதாலத் தீர்ப்பாணையானது உயர்நீதிமன்றத்தில் மட்டுமே விவாதிக்கப்பட வேண்டும் என்றும், வேறு எந்த நீதிமன்றத்திலும் அல்ல என்றும், சட்ட விதிமுறைகளின்படி எதிர்மனுதாரர்கள்/ வாதிகள் அவர்களுடைய சொத்துக்கள் சம்மந்தமாகத் தான் தாவா வழக்கினை தாக்கல் செய்ய வேண்டுமேயொழிய மற்றவர்கள் சொத்துக்கள் மீது வழக்கு தாக்கல் செய்து சட்டத்திற்கு புறம்பாக பரிகாரம் கோரக்கூடாது

என்றும், எந்நிலையிலும் இந்த அடாவடித்தனமாக அசல் வழக்கினை தாக்கல் செய்யும்போது, இந்நீதிமன்றமானது தம்மிச்சையாகவே அசல் வழக்கினை சரிபார்த்து தாவா பிராதினை திருப்பியிருக்க வேண்டும் என்று கூறுப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில், 2-வது பரிகாரம் குறித்து, மனுதாரரால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.271/2021 என்ற வழக்கில் இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பினர்கள் அல்லர் என்றும், எனவே, 2-வது பரிகாரத்தை குறித்து, லோக் அதாலத்தில் பிறப்பிக்கப்பட்ட தீர்வத்தை தீர்மானிக்கக்கூடிய அதிகாரம் இந்நீதிமன்றத்திற்கு உள்ளது என்றும் கூறி எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன எ.சா.ஆ.11 ஆவணத்தை பரிசீலிக்கையில், இம்மனுதாரர் தன்னை வாதியாகவும், இந்த அசல் வழக்கில் கண்டுள்ள 2 முதல் 7 பிரதிவாதிகளை, பிரதிவாதிகளாகவும் கண்டு, இந்த வழக்கில் கண்டுள்ள தாவா சொத்தினை பொறுத்து ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.271/2021 தாக்கல் செய்துள்ளார் என்பதும், மேற்படி அசல் வழக்கில், மனுதாரரும், இவ்வழக்கில் கண்டுள்ள 2 முதல் 7 பிரதிவாதிகளும் மேற்படி வழக்கில் சமாதானமாக போய்வதாகவும், பாக்கிக் கிரையத் தொகையை பெற்றுக்கொண்டதாகவும், கிரையப் பத்திரம் எழுதிக் கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டு, லோக் அதாலத்தில் அசல் வழக்கு 26.04.2022 அன்று முடிக்கப்பட்டுள்ளது என்பதும், மேற்படி அசல் வழக்கு எண்.271/2021-ல் இந்த வழக்கின் வாதிகளான எதிர்மனுதாரர்கள், தரப்பினர்கள் அல்லர் என்பதும் தெரியவருகிறது. மனுதாரர் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மாண்புமிகு உச்சநீதிமன்ற (2018) 13 Supreme Court Cases 480 என்ற முன் தீர்ப்பில், ஒரே தரப்பினர்களிடைய வழக்கு தொடுக்கப்பட்டு, தரப்பினர்களிடையே லோக் அதலாத்தில் வழக்கினை முடித்துக் கொண்ட பிறகு, மீண்டும், அதே தரப்பினர்களிடையே பிரச்சனைகள் ஏற்பட்டால், அந்த வழக்கின் எத்தரப்பினர்களும்,

அதே நீதிமன்றத்தில் மற்றொரு வழக்கினை தாக்கல் செய்ய இயலாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வழக்கின் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் மேற்சொன்ன அசல் வழக்கு எண்.271/2021 வழக்கில் தரப்பினர்கள் அல்லர். தரப்பினர்கள் அல்லாத நிலையில், லோக் அதலாத்தில் முடிக்கப்பட்ட வழக்கினை மீண்டும் இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுத்து விசாரணை செய்ய முடியாது என்றும், சட்டத்திற்கு புறம்பான பரிகாரம் கோர முடியாது என்றும் மனுதாரர் தரப்பில் கூறியுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளும்படியாக அமையவில்லை. அடாவடித்தனமான அசல் வழக்கு எவ்வாறு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் மனுதாரர் தரப்பில் சொல்லப்படவில்லை. எனவே, மனுதாரர் தரப்பில் கூறியுள்ள மேற்கண்ட சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளும்படியாக அமையவில்லை.

10. மனுதாரர் தரப்பில், மேற்படி அசல் வழக்கில் வழக்குமூலம் எழவில்லை என்று கூறப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கில் வழக்கு மூலம் ஏற்படவில்லை என்பதை நிரூபிக்கும் வகையில் மனுதாரர் தரப்பில் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. அதேசமயம், எதிர்மனுதாரர்கள் தரப்பில், 26.04.2022 அன்று மனுதாரர்/1-ஆம் பிரதிவாதி பெற்ற லோக் அதாலத் தீர்வத்தை புதுப்பேட்டை சார்பதிவாளரிடம் பதிவுக்காக தாக்கல் செய்து, அன்றே புதுப்பேட்டை சார்பதிவாளரால் பதிவு செய்யப்பட்டுள்ளதை பிராதில் வழக்குமூலமாக துல்லியமாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், வாதிகளின் உரிமைக்கு ஆதரவாக, நீதிமன்ற தீர்ப்பிற்கு நிரூபிக்க வேண்டியது அவசியம் என்றும், மற்ற வகையில் வழக்கு மூலம் என்பது சங்கதிகளின் ஒரு தொகுப்பாக இருப்பதால் அதனை எதிர்மனுதாரர்கள் விசாரணையின்போது தான் நிரூபிக்க முடியும் என்றும், நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் ஒரு சிறிய மாறுபட்ட வழக்கு மூலம் கூடினாலும், அதை பொறுத்து விசாரணை செய்யவும் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இருக்கும் என்றும் கூறி, வழக்கு

மூலத்திற்கு ஆதரவாக எ.சா.ஆ.11 மற்றும் எ.சா.ஆ.12 தாக்கல் செய்துள்ளனர். எனவே, மனுதாரர் தரப்பில், வழக்கு பிராதில் வழக்குமூலம் எழவில்லை என்று கூறும் சங்கதியானது இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளும் வகையில் அமையவில்லை.

11. மனுதாரர் தரப்பில் தாவா வழக்கானது ஏக்கர் 7.20 செண்ட்டுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதற்கு மாறாக, எதிர்மனுதாரர்கள் வாதிகள் தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் 0.69 செண்ட் மட்டுமே உள்ளது என்றும், அசல் வழக்கு எண்.271/2021-ல் வழக்கு சொத்தின் மதிப்பு ரூ.25,00,000/- என்றும், சட்டவிரோதமான கோரிக்கையாக இருந்தாலும் கூட இந்த வழக்கின் பரிகாரத்திற்காக ரூ.25,00,000/- மதிப்பிட்டிருக்க வேண்டும் என்றும், மேலும், முறையான நீதிமன்றக் கட்டணத்தை செலுத்தியிருக்க வேண்டும் என்றும், அதற்கு மாறாக, எதிர்மனுதாரர்கள், ரூ.25,00,000/-க்கு பதிலாக ரூ.5000/-மும், ரூ.75,000/-த்திற்கு பதிலாக மிகவும் சொற்ப தொகையான ரூ.150/- மட்டுமே செலுத்தி அரசாங்கத்தை ஏமாற்றியுள்ளனர் என்றும், எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தின் மதிப்பு ரூ.2,75,00,000/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதற்கு நீதிமன்றக் கட்டணம் சட்டப்பிரிவு 25(எ)-ன்படி ரூ.8,25,000/- செலுத்த வேண்டும் என்றும், எதிர்மனுதாரர்கள் தவறான சட்டவிதிகளை குறிப்பிட்டு குறைவான நீதிமன்றக் கட்டணத்தை செலுத்தியிருப்பதால் வழக்கு பிராதினை நிராகரிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில், தாவா சொத்தானது ஒற்றை துண்டாக உள்ளது என்றும், அதன் விஸ்தீர்ணம் ஏக்கர் 7.20 செண்ட் என்றும், தாவா சொத்துக்களின் முழு விஸ்தீர்ணத்திற்கும் சேர்த்து தான் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றும், அதனை விசாரணையின்போது நிரூபிக்கப்படும் என்றும், எதிர்மனுதாரர்கள் விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாவா வழக்கு தாக்கல் செய்து, அதற்கு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் சட்டப்பிரிவு 25(பி)-ன்படி நீதிமன்றக் கட்டணம்

செலுத்தப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. வழக்குரையைப் பரிசீலனை செய்கையில், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தாவா சொத்தானது வாதிகளுக்குப் பாத்தியமானது என்று விளம்புகை செய்யக்கோரியும், மனுதாரர் மற்றும் மற்ற 2 முதல் 9 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், மற்ற பிரதிவாதிகளுக்கு எதிராக இந்நீதிமன்ற அசல் வழக்கு எண்.271/2021-ல் பிறப்பிக்கப்பட்ட நடவடிக்கைகள் இல்லாநிலையது என்று விளம்புகை செய்யக்கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்பதும், வழக்கு சொத்தின் மொத்த மதிப்பு ரூ. 2,75,00,000/- என்றும், அதில் பாதி மதிப்பு ரூ.1,37,50,000/- என்றும், விளம்புகை பரிகாரத்திற்கு த.நா.நீ.ம.கட்டணம் சட்டப்பிரிவு 25(பி)-ன் படி ரூ.4,12,500/- என்றும், அசல் வழக்கு எண்.271/2021 ன் நடவடிக்கைகளானது இல்லா நிலையது என்று விளம்புகை செய்யக்கோரும் பரிகாரத்திற்கான மதிப்பு ரூ.5,000-/ என்றும், அதற்கான த.நா.நீ.ம.கட்டணம் சட்டப்பிரிவு 25(டி)-ன்படி ரூ.150/-என்றும், ஆக மொத்தம் ரூ.4,12,650/- செலுத்தப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. மனுதாரர் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.271/2021 ஆனது ஏற்றதை ஆற்றுக பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், சொத்தின் மதிப்பு ரூ.25,00,000/- மதிப்பிடப்பட்டு, அதற்கான நீதிமன்றக் கட்டணம் ரூ.75,000/- செலுத்தப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்திற்கான வழிக்காட்டு மதிப்பீட்டினை தாக்கல் செய்துள்ளனர். வழக்கு விசாரணையின்போது நீதிமன்றக் கட்டணம் குறைவாக செலுத்தப்பட்டிருப்பதாக தெரிய வந்தால், வழக்கு சொத்திற்கு தேவையான செலுத்தப்பட்ட நீதிமன்றக் கட்டணம் போக பாக்கி நீதிமன்றக் கட்டணத்தை செலுத்த உத்தரவிடுவதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது. எனவே, மனுச் சங்கதிகளை நிரூபிக்கும் வகையில் யாதொரு வாய்மொழி சாட்சியமோ? ஆவண சாட்சியமோ முன்னிடப்படாமல், வழக்கு பிராதினை நிராகரிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவினை அனுமதிப்பதற்கான போதிய

முகாந்திரம் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மேற்கண்ட விவாதங்களிலிருந்தும், வழக்காவணங்களிலிருந்தும், மனுதாரரால் மேற்படி அசல் வழக்கின் பிராதினை நிராகரிக்கக்கோரி தாக்கல் செய்துள்ள மனுவானது அனுமதிக்கத்தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் தீர்மானித்து, இம்மனுவினை தள்ளுபடி செய்து, இவ்வாறாக இம்மனுவில் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படுகிறது.

12. முடிவாக, இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரிடையாக உரைக்கப்பட்டு, அவரால் நேரிடையாகக் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2023-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 5-ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S JAWAHAR Digitally signed by S JAWAHAR Date: 2023.12.05 18:11:32 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

கடலூர்.

**இணைப்பு** :

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் : இல்லை**

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி : இல்லை**

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம்** :

| | | |
|---|---|---|
| எ.சா.ஆ 1 | 26.12.1956 | துரைசாமிகனபாடிகன் பெயரில் உள்ள பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் புகைப்பட நகல் |
| எ.சா.ஆ 2 | 06.12.1956 | துரைசாமிகனபாடிகன் பெயரில் உள்ள பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் புகைப்பட நகல் |
| எ.சா.ஆ 3 | 26.05.1959 | பதிவ செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் புகைப்பட நகல் |
| எ.சா.ஆ 4 | 25.10.1963 | ஸ்ரீகுமார் அய்யர் பெயரில் உள்ள பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் புகைப்பட நகல் |
| எ.சா.ஆ 5 | 14.07.2010 | பண்ருட்டி, மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.296/04-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட நகலின் புகைப்பட நகல் |

| | | |
|---|---|---|
| எ.சா.ஆ 6 | 14.07.2010 | பண்ருட்டி, மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.296/04-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் சான்றிட்ட நகலின் புகைப்பட நகல் |
| எ.சா.ஆ 7 | 21.01.2011 | பண்ருட்டி, சார்பு நீதிமன்ற உரிமையியல் மேல்முறையீட்டு வழக்கு எண்.33/2010 மற்றும் குறுக்கு மேல்முறையீட்டில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் சான்றிட்ட நகலின் புகைப்பட நகல் |
| எ.சா.ஆ 8 | 04.01.2022 | மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்ற S.A.Nos.541 & 542/2011 and M.P.Nos. 1 &1 of 2011-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையின் நகல். |
| எ.சா.ஆ 9 | 28.03.2022 | குமாரய்யர் மற்றும் அமரசாமி கவுண்டர் ஆகியோர் பெயரில் உள்ள பட்டாவின் கணினி நகல் |
| எ.சா.ஆ 10 | 08.03.2022 | நில ஆர்ஜித நிலங்களுக்கு தீர்ப்பாணை வழங்கப்பட்டது சம்மந்தமாக தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி.எ) அலுவலகம், சென்னை-கன்னியாகுமரி தொழிற்தடதிட்டம், காஞ்சிபுரம் அனுப்பிய வாசவிக்கு அனுப்பிய அழைப்பாணையின் நகல் |
| எ.சா.ஆ 11 | .. | கடலூர், முதன்மை மாவட்ட நீதிமன்ற O.S.No.271/2022-ன் பிராது மற்றும் Lok Adalat settlement Memo ஆகியவற்றை பதிவு செய்யப்பட்டதின் புகைப்பட நகல். |
| எ.சா.ஆ 12 | 27.04.2022 | வில்லங்கச் சான்றின் புகைப்பட நகல் |
| எ.சா.ஆ 13 | 27.04.2022 | அரசு வழிக்காட்டு மதிப்பீட்டின் பதிவிறக்க நகல் |

S JAWAHAR Digitally signed by S JAWAHAR Date: 2023.12.05 18:11:42 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

கடலூர்.